ஒன்பதாம் வகுப்பு -கணக்கு - புள்ளியியல் - ஒரு மதிப்பெண் தேர்வு

ஆக்கம்: கோ.இளவரசு M.A.,M.Sc.,M.Phil.,B.Ed., B.T.Asst.,

பயிற்சி 8.4

2LX9M

## பலவுள் தெரிவு வினாக்கள்

1. மையப்புள்ளி $m$ , தொடர் நிகழ்வெண் பரவலின் ஒரு பிரிவின் மேல் எல்லை '$b$'எனில், அதன் கீழ் எல்லை.
   (1) $2m - b$ (2) $2m+b$ (3) $m-b$ (4) $m-2b$.
2. ஏழு மதிப்புகளின் சராசரி 81. அவற்றில் ஒரு மதிப்பு நீக்கப்படும் போது மற்ற மதிப்புகளின் சராசரி 78 ஆக அமைகிறது, எனில் நீக்கப்பட்ட மதிப்பு எவ்வளவு
   (1) 101 (2) 100 (3) 99 (4) 98.
3. ஒரு தரவில் அதிகமுறை இடம் பெற்றுள்ள உறுப்பின் மதிப்பு.
   (1) நிகழ்வெண் (2) வீச்சு (3) முகடு (4) இடைநிலை அளவு..
4. பின்வரும் எண் தொகுதிகளில் சராசரி, இடைநிலை மற்றும் முகடு ஒரே மதிப்பாக அமையும் தொகுதி எது?
   (1) 2,2,2,4 (2) 1,3,3,3,5 (3) 1,1,2,5,6 (4) 1,1,2,1,5.
5. சராசரியிலிருந்து, அனைத்து $n$ உறுப்புகளின் விலக்கங்களின் கூட்டுத்தொகை
   (1) 0 (2) $n$-1 (3) $n$ (4) $n$+1.
6. $a,b,c,d$ மற்றும் $c$ இன் சராசரி 28. $a$, $c$ மற்றும் $c$ இன் சராசரி 24, எனில் $b$ மற்றும் $d$ இன் சராசரி
   (1) 24 (2) 36 (3) 26 (4) 34
7. $x$, $x$+2, $x$+4, $x$+6, $x$+8, என்ற தரவின் சராசரி 11 எனில் முதல் மூன்று தரவுகளின் கூட்டுச்சராசரி
   (1) 9 (2)11 (3) 13 (4) 15.
8. 5,9,$x$,17 மற்றும் 21 இன் சராசரியானது 13 எனில், $x$ இன் மதிப்பு
   (1) 9 (2) 13 (3) 17 (4) 21.
9. முதல் 11 இயல் எண்களின் வர்க்கங்களின் சராசரி
   (1) 26 (2) 46 (3) 48 (4) 52.
10. ஓர் எண் தொகுப்பின் சராசரி $\bar{X}$ . எண் தொகுப்பின் ஒவ்வொரு மதிப்பும் $z$ என்ற எண்ணால் பெருக்கப்படும் போது அதன் சராசரி
   (1) $\bar{X}+z$ (2) $\bar{X} - z$ (3) $z\ \bar{X}$ (4) $\bar{X}$

LIVEWORKSHEETS